No. of Printed Pages : 7

பதிவு எண்

# தமிழ் - முதல் தாள்
# Language – Part I – TAMIL – Paper I
## (செய்யுள், உரைநடை)

நேரம் : 2½ மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு :** (i) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

(ii) வினா எண் **49** - க்கான விடை மட்டும் செய்யுள் வடிவில் அடிபிறழாமல் அமைதல் வேண்டும்.

www.usefuldesk.co

### பிரிவு - I
(மதிப்பெண்கள் : **20**)

### பகுதி - 1

**I.** **உரிய** விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. **6x1=6**

**1.** நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்று பாடியவர் ________.

(அ) கவிமணி (ஆ) பாரதிதாசன் (இ) பாரதியார்

**2.** சரஸ்வதி அந்தாதி ________ இயற்றிய நூல்களுள் ஒன்று.

(அ) கம்பர் (ஆ) ஒட்டக்கூத்தர் (இ) புகழேந்தி

[ திருப்புக

www.usefuldesk.com www.usefuldesk.com

3. ''பக்திச் சுவைநனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவ'' எனப் பாடியவர் ________.

(அ) பெ. சுந்தரனார்

(ஆ) மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார்

(இ) கவிஞர் வெ. இராமலிங்கனார்

4. அம்பேத்கருக்கு இந்திய அரசு வழங்கிய விருது ________.

(அ) பத்ம ஸ்ரீ

(ஆ) பாரத ரத்னா

(இ) பத்ம விபூஷண்

5. சரிந்தக் குடலைப் புத்தத் துறவியர் சரிசெய்த செய்தியை ________ எடுத்துரைக்கிறது.

(அ) திருக்குறள்

(ஆ) மணிமேகலை

(இ) கம்பராமாயணம்

6. ________ மீது 'எழுத்தறியும் பெருமான் மாலை' என்னும் நூலை பாடியவர் இராமலிங்கர்.

(அ) பிரம்மா

(ஆ) திருமால்

(இ) சிவபெருமான்

www.usefuldesk.com

## பகுதி - 2

**II.** கோடிட்ட இடத்தை நிரப்புக. **6x1=6**

7. மாணிக்கவாசகர் கட்டிய கோவில் ________ உள்ளது.

8. தூது ________ வகை சிற்றிலக்கியங்களுள் ஒன்று.

9. தாண்டக வேந்தர் என அழைக்கப்படுபவர் ________.

www.usefuldesk.com www.usefuldesk.com

10. 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என, உலகுக்கு ________ எடுத்துரைக்கிறது.

11. பேச்சு முடிவில் ________ கூறிக் கருத்தினை நிலைநாட்டி முடித்தல் வேண்டும்.

12. 'இன்னா செய்தார்க்கும்' என்னும் திருக்குறளை மொழிபெயர்த்த உருசிய அறிஞர் ________.

## பகுதி - 3

III. பொருத்துக. 4x1=4

13. நாமார்க்கும் குடியல்லோம் - உமறுப்புலவர்

14. திருக்கை வழக்கம் - திருநாவுக்கரசர்

15. பூத்தது மானுடம் - கம்பர்

16. முதுமொழி மாலை - இளந்திரையன்

## பகுதி - 4

IV. விடைக்கேற்ற வினா அமைக்கவும். 4x1=4

17. 'ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' என்னும் வள்ளுவர் வாய்மொழியை நன்குணர்ந்தவர் பெரியார்.

18. மக்களைத் தன்பால் ஈர்த்துக் கட்டிப்போடும் ஆற்றல் கொண்டது திரை உலகம்.

19. தமிழர்கள் அரபு நாட்டுடனும் யவன நாட்டுடனும் வணிகத் தொடர்பு கொண்டிருந்தார்கள்.

20. தொழில்நுட்பப் பயிலகத்தில் பயில்வோர்க்கு நிறைய வேலைவாய்ப்புகள் உள்ளன.

[ திருப்புக

www.usefuldesk.com www.usefuldesk.com

## பிரிவு - II

(மதிப்பெண்கள் : 20)

### பகுதி - 1

V. கீழ்க்காணும் வினாக்களுள் **எவையேனும் ஐந்தினுக்கு மூன்று வரிகளுக்கு மிகாமல்** விடையளிக்கவும். 5x2=10

21. ஊக்கமுடையான் ஒடுக்கம் எதனைப் போன்றது ?

22. பழியில்லா மன்னனாய் வாழ்பவனின் பண்புகளாகத் தனிமேதாவியார் குறிப்பிடுவன யாவை ?

23. ''அன்புள இனிநாம் ஓர் ஐவர்கள் உளரானோம்'' - யார் யாரிடம் கூறியது ?

24. அப்பூதியடிகள் எவ்வெவற்றுக்கெல்லாம் திருநாவுக்கரசு எனப் பெயர் வைத்தார் ?

25. போலிப்புலவர்களைத் தண்டிப்போர் யாவர் ?

26. கெடுப்பார் இலானுங் கெடுபவர் யார் ?

27. நந்திவர்மன் வீரம் எத்தகையது ?

### பகுதி - 2

VI. கீழ்க்காணும் வினாக்களுள் **எவையேனும் ஐந்தினுக்கு மூன்று வரிகளுக்கு மிகாமல்** விடையளிக்கவும். 5x2=10

28. ஒருமொழி நிலைபெற்று நிற்பதற்குரிய தகுதிப்பாடுகள் யாவை ?

29. செல்லுலாய்டு என்னும் பொருள் எதற்குப் பயன்படுகிறது ?

30. ஏற்றுமதி இறக்குமதி குறித்துக் கூறும் நூல்கள் யாவை ?

31. தமிழரின் கருவியல் அறிவைத் தெரிவிக்கும் பாடலடிகளை எழுதுக.

32. இந்தியாவின் வாழ்வு குறித்துக் காந்தியடிகள் கூறுவது யாது ?

33. இராமலிங்கர் 'புதுநெறிகண்ட புலவர்' எனப் போற்றப்படக் காரணம் என்ன ?

34. பட்டப்படிப்புகளில் எவையேனும் நான்கினை எழுதுக.

www.usefuldesk.com www.usefuldesk.com

## பிரிவு - III

(மதிப்பெண்கள் : 24)

### பகுதி - 1

**VII.** கீழ்க்காணும் வினாக்களுள் **எவையேனும் மூன்றனுக்கு** ஆறு வரிகளுக்கு **மிகாமல்** விடையளிக்கவும். **3x4=12**

**35.** கண்ணகிக்குப் பாண்டியன் நெடுஞ்செழியன் கூறிய மறுமொழி யாது ?

**36.** அருகிலிருந்த முனிவர்களை நோக்கி இராமன் கூறியவை யாவை ?

**37.** தலைவனுக்குத் தோழி கூறும் செய்தியினை நற்றிணைப் பாடல்வழித் தொகுத்து எழுதுக.

**38.** சீறாப்புராணம் - குறிப்பு எழுதுக.

**39.** சாதனைப் பூக்கள் என்று எவற்றை இளந்திரையன் சுட்டுகிறார் ?

### பகுதி - 2

**VIII.** கீழ்க்காணும் வினாக்களுள் **எவையேனும் மூன்றனுக்கு** ஆறு வரிகளுக்கு **மிகாமல்** விடையளிக்கவும். **3x4=12**

**40.** மணக்கொடை குறித்துப் பெரியார் கூறுவன யாவை ?

**41.** அம்பேத்கர் விரும்பிய இலட்சிய சமூகம் பற்றி எழுதுக.

**42.** பேச்சுக்கலையில் மொழியும் முறையும் எவ்வாறு அமைதல் வேண்டும் ?

**43.** கடல் வாணிகம் குறித்து எழுதுக.

**44.** மனிதநேயம் குறித்துக் காந்தியடிகள் கூறியது யாது ?

[ திருப்புக

www.usefuldesk.com www.usefuldesk.com

## பிரிவு - IV

(மதிப்பெண்கள் : 10)

**IX.** கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்கவும். **5x1=5**

**45.** அறிவெனப் படுவது பேதையார் சொல்நோன்றல்
செறிவெனப் படுவது கூறியது மறாஅமை
நிறையெனப் படுவது மறைபிறர் அறியாமை
முறையெனப் படுவது கண்ணோடாது உயிர்வௌவல்
பொறையெனப் படுவது போற்றாரைப் பொறுத்தல்

(i) இப்பாடல் இடம் பெறும் நூல் எது ?

(ii) இப்பாடலின் ஆசிரியர் யார் ?

(iii) 'நோன்றல்' - இலக்கணக் குறிப்பு எழுதுக.

(iv) 'செறிவெனப்படுவது' - பிரித்து எழுதுக.

(v) பொறுமை என்னும் பொருள் தரும் சொல்லை எழுதுக.

**46.** கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்கவும். **5x1=5**

தமிழர் செம்மண் நிலத்தை அதன் பயன் கருதிப் போற்றினர். இதனைச் 'செம்புலப் பெயல் நீர்போல' என்னும் குறுந்தொகை வரி உணர்த்தும். உவர்நிலம், மிகுந்த நீரைப் பெற்றிருந்தும் பயன் தருவதில்லை. இதனை, 'அகல்வயல் பொழிந்தும் உறுமிடத் துதவா உவர்நிலம்' என்னும் புறநானூற்று வரிகள் புலப்படுத்துகின்றன. எதற்கும் பயன்படாத நிலம் களர்நிலம். இதனைப் 'பயவாக் களரனையர் கல்லாதவர்' என்பார் திருவள்ளுவர்.

தமிழர் தம் வாழிடங்களை நிலத்தின் தன்மைக்கேற்பப் பாகுபடுத்தியுள்ளனர். அவையே ஐவகை நிலங்கள்.

ஐவகை நிலங்களுக்கும் உரிய உணவு, விலங்கு, பறவை போன்றவற்றையும் தமிழர் பகுத்தும் வகுத்தும் வைத்துள்ளனர்.

**வினாக்கள் :**

(i) 'செம்புலப் பெயல் நீர்போல' என்னும் வரி இடம் பெற்றுள்ள நூல் எது ?

(ii) புறநானூற்று வரிகள் புலப்படுத்தும் நிலத்தின் பெயர் என்ன ?

(iii) கல்லாதவரை எந்நிலத்தோடு திருவள்ளுவர் ஒப்புமைப்படுத்துகிறார் ?

(iv) நிலத்தின் தன்மைக்கேற்ப தமிழர் தம் வாழிடங்களை எத்தனை வகைகளாகப் பிரித்தனர் ?

(v) தமிழர் எவற்றைப் பகுத்தும் வகுத்தும் வைத்துள்ளனர் ?

www.usefuldesk.com www.usefuldesk.com

## பிரிவு - V

(மதிப்பெண்கள் : 26)

### பகுதி - 1

X. கீழ்க்காணும் வினாக்களுக்கு பத்து வரிகளுக்கு மிகாமல் விடையளிக்கவும். 2×8=16

47. (அ) "தேரா மன்னா" என விளித்துக் கண்ணகி கூறியன யாவை ?

அல்லது

(ஆ) "பொருள் செயல்வகை" என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் கூறும் கருத்துகளைத் தொகுத்தெழுதுக.

48. (அ) செம்மொழிக்குரிய எவையேனும் ஐந்து தகுதிப்பாடுகளை விளக்கி எழுதுக.

அல்லது

(ஆ) தமிழர் இசைக்கலை குறித்துத் தொகுத்தெழுதுக.

### பகுதி - 2

49. பின்வரும் மனப்பாடப் பாடலை அடிபிறழாமல் எழுதுக. 2+2+6=10

(அ) நன்றிக்கு - எனத் தொடங்கும் குறள்.

(ஆ) பொருள் - என முடியும் குறள்.

(இ) 'உலகியலின் அடங்கலுக்கும்' எனத் தொடங்கும் தமிழ் வளர்ச்சிப் பாடல்.

-o0o-

www.usefuldesk.com www.usefuldesk.com